பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
07 10 2024 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- இந்தியா வந்துள்ள மாலத்தீவு அதிபர் டாக்டர் முகமது **Muizzu** -வுக்கு இன்று காலை குடியரசுத் தலைவர் மாளிகையில் பாரம்பரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.
- 2026-ஆம் ஆண்டுக்குள் இடதுசாரி தீவிரவாதத்தை முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- சென்னையில் நடைபெற்ற இந்திய விமானப்படையின் சாகச நிகழ்ச்சிக்குத் தேவையான முன்னேற்பாடுகளை தமிழக அரசு மேற்கொள்ளவில்லை என்று மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் குற்றம்சாட்டியுள்ளார்.
- ஜம்மு-கஷ்மீர் மற்றும் ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன.
- சிங்கப்பூர் ஓபன் பில்லியர்ஸ் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி பட்டம் வென்றார்.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ---

**[]<<<>>>[]**

இந்தியா வந்துள்ள மாலத்தீவு அதிபர் டாக்டர் முகமது **Muizzu** ம-வுக்கு இன்று காலை குடியரசுத் தலைவர் மாளிகையில் பாரம்பரிய வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திரமோடி, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் ஆகியோர் மாலத்தீவு அதிபர் மற்றும் அவரது துணைவியார் திருமதி சஜீதா முகமது-வை வரவேற்றனர்.

முன்னதாக மாலத்தீவு அதிபருக்கு அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் டாக்டர் முமது, தில்லி ராஜ்காட்டுக்குச் சென்று மகாத்மா காந்தி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று மாலத்தீவு அதிபருடன் இருதரப்பு மண்டல மற்றும் சர்வதேச அளவிலான விஷயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இருதரப்பு ஒத்துழைப்புக்கான பேச்சுக்களுக்குப் பின்னர் பல முக்கிய ஒப்பந்தங்களும் இரு நாடுகளுக்கும் இடையே கையெழுத்தாகவுள்ளன.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வின் அழைப்பை ஏற்று மாலத்தீவு அதிபர் ஐந்து நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

[]<<<>>>[]

அரசியல் சாசன பதவியில் 23-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் பிரதமர் திரு நரேந்திரமோடிக்கு உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் 23 ஆண்டுகளுக்கு முன் குஜராத் மாநில முதலமைச்சராக தமது அரசியல் சாசன பதவியை தொடங்கிய திரு நரேந்திரமோடி, அர்ப்பணிப்பு உணர்வோடு நாட்டு நலனுக்காகவும், மக்களுக்காகவும் அரும்பணி ஆற்றி வருகிறார் என்று கூறியுள்ளார்.

பொது வாழ்வில் ஈடுபடும் அனைவருக்கும் அவர் முன்மாதிரியாக திகழ்கிறார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏழை எளிய மக்களுக்காகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் பிரதமர் திரு நரேந்திரமோடி என்றும் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

[]<<<>>>[]

இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களின் முதலமைச்சர்களுடன் உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா இன்று புதுதில்லியில் ஆய்வு மேற்கொள்கிறார்.

ஆந்திரபிரதேசம், பீகார், சத்திஷ்கர், ஜார்க்கண்ட், தெலங்கானா, ஒடிஸா, மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்கிறார்கள்.

தேசிய பாதுகாப்பு துணை ஆலோசகர் மற்றும் மத்திய மாநில அரசுகளின் மூத்த அதிகாரிகள், மத்திய ஆயுதப்படை அதிகாரிகள் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்கின்றனர்.

இந்த ஆய்வுக்கூட்டம் தொடர்பாக உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இடதுசாரி தீவிரவாதத்தை முற்றிலுமாக முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நக்ஸல் மற்றும் இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு செய்து தரும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

பிரதமர் திரு நரேந்திரமோடி மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் காரணமாக இடதுசாரி தீவிரவாதம் 72 சதவீதமாக குறைந்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு தீவிரவாத குழுக்களுடன் அவ்வப்போது நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து பலர் தங்களது தீவிரவாத நடவடிக்கைகளை கைவிட்டு இயல்பு நிலைக்கு திரும்பி இருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்குத் தேவையான சாலை வசதிகள் செய்து தரப்பட்டு மக்களின் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல மாநிலங்களில் மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்கள் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

14 ஆயிரம் கிலோமீட்டர் தூரத்திற்கு இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களில் சாலைகள் போடப்பட்டுள்ளதாகவும், ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட செல்போன் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் உள்துறை அமைச்சகத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக்கொள்கை குழுவின் மூன்று நாள் கூட்டம் மும்பையில் இன்று தொடங்குகிறது.

ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்திகாந்ததாஸ் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பொருளாதார வளர்ச்சி, உணவுப் பொருட்களின் விலை உயர்வு, வட்டி விகிதம் ஆகியவை குறித்து விவாதிக்கப்படுகிறது.

நுகர்வோர் விலை குறியீட்டை நான்கு சதவீதம் முதல் இரண்டு சதவீத அளவிற்குள் கொண்டு வருமாறு மத்திய அரசு, ரிசர்வ் வங்கியை கேட்டுக் கொண்டுள்ளது.

[]<<<>>>[]

சென்னை மெரினா கடற்கரையில் நடந்த விமானப்படை வான்வெளி சாகச நிகழ்ச்சியை காண வந்தவர்களில் உடல்நலம் பாதிக்கப்பட்ட ஐந்து பேர் மருத்துவமனையில் உயிரிழந்ததாக தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடுமையான வெப்பத்தின் தாக்கம் காரணமாக இந்த உயிரிழப்பு நேரிட்டதாகக் கூறினார்.

இந்த நிகழ்ச்சிக்குத் தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் மாநில அரசு சார்பில் செய்யப்பட்டிருந்ததாகவும் திரு மா சுப்ரமணியன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

சென்னை மெரினா கடற்கரையில் இந்திய விமானப்படையின் வான்வெளி சாகச நிகழ்ச்சிக்கு போதிய முன்னேற்பாடு நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ளவில்லை என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் குற்றம்சாட்டியுள்ளார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த நிகழ்ச்சி தொடர்பாகவும், பாதுகாப்பு தொடர்பாகவும் விமானப்படை அதிகாரிகள் பலகட்ட பேச்சுவார்த்தை நடத்தியும் பலனளிக்கவில்லை என்று தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - எல் முருகன் ) -48---- செகண்ட்*

[]<<<>>>[]

விமானப்படை சாகச நிகழ்ச்சிக்கு பல லட்சம் பேர் வருவார்கள் என்பதை முன்கூட்டியே கணித்து நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமென அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களை காக்க வேண்டியது அரசின் கடமை என்றும், மாநில அரசு முறையாக திட்டமிட்டு பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகளை செய்ய தவறிவிட்டதாகத் தெரிவித்தார்.

அரசின் கவனக்குறைவால் ஐந்து பேர் உயிரிழந்ததற்கு முதலமைச்சர் திரு முக ஸ்டாலின் பொறுப்பேற்க வேண்டுமென்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

**[]<<<>>>[]**

ஜம்மு-கஷ்மீர் மற்றும் ஹரியானா சட்டப்பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன.

ஜம்மு-கஷ்மீரில் 90 தொகுதிகளுக்கு மூன்று கட்டங்களாக நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் 20 மையங்களில் பலத்த பாதுகாப்புடன் எண்ணுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்ட தலைநகரங்களில் மத்திய ஆயுதப்படையினர் மற்றும் மாநில ஆயுதப்படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அனைத்து இடங்களிலும் மூன்றடுக்கு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஹரியானா மாநிலத்தில் மொத்தம் உள்ள 90 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகளும் நாளை எண்ணப்படுகின்றன.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு பங்கஜ் அகர்வால், ஒவ்வொரு தொகுதியிலும் பதிவான வாக்குகள் 90 மையங்களில் எண்ணப்பட உள்ளதாகத் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

நில முறைகேடு மற்றும் சட்டவிரோத பண பரிவர்த்தனை வழக்கில் ராஷ்ட்ரீய ஜனதாதள் தலைவரும், முன்னாள் ரயில்வே அமைச்சருமான திரு லாலுபிரசாத் யாதவ் மற்றும் அவர்களின் இரு மகன்களுக்கு தில்லி நீதிமன்றம் இன்று ஜாமீன் வழங்கியது.

இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட அனைவருக்கும் ஒரு லட்சம் ரூபாய் சொந்த ஜாமீனில் விடுவிக்கப்படுவதாக நீதிபதி தெரிவித்தார்.

[]<<<>>>[]

மாநிலத்தில் உள்ள 22 மாவட்டங்களிலும் போதிய பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகள் சி சி டி பி கேமரா மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.,

வாக்கு எண்ணும் மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாகவும் திரு பங்கஜ் அகர்வால் தெரிவித்தார்.

[]<<<>>>[]

சிங்கப்பூர் ஓபன் பில்லியர்ட்ஸ் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி பட்டம் வென்றார்.

இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் அவர் ஐந்துக்கு-ஒன்று என்ற புள்ளிக்கணக்கில் சிங்கப்பூரின் **Jadedn ong** -யை வென்றார்.

[]<<<>>>[]

19 வயதுக்கு உட்பட்டோருக்கான இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்கியது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்து வரும் இந்தியா சற்று முன் வரை -2 விக்கெட் இழப்புக்கு 120 ரன் எடுத்துள்ளது.

[]<<<>>>[]

உலகக்கோப்பை மகளிர் டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து இன்று தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.,

சார்ஜாவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

பெருவின் லிமாவில் நடைபெற்ற உலகக்கோப்பை ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியா 13 தங்கம், மூன்று வெள்ளி, எட்டு வெண்கலம் என 24 பதக்கங்களை கைப்பற்றி முதலிடத்தை பிடித்துள்ளது.

**[]<<<>>>[]**